සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

## வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
## Provincial Department of Education - NWP

மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் 08 - 2023 (2024)
Third Term Test - Grade 08 - 2023 (2024)

# கிறிஸ்தவம்

நேரம்: 2 மணி.

சுட்டெண்:

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

மன்னால் உருவாக்கப்பட்ட மனிதன் உயிரடைந்தது,
i. இறைவனின் வார்த்தையால்.
ii. இறைவனின் வல்லமையால்.
iii. இறைவன் தனது மூச்சை கொடுத்ததினால்.
iv. அற்புதத்தினால்.

02. இஸ்ரேல் மக்கள் பாலைவனத்தில் பயணம் செய்கையில் பகலில் அவர்களை வழிநடத்தியது,
i. அக்கினித்தூண்.
ii. நெருப்பும் முகிலும்.
iii. மேகஸ்தம்பம்.
iv. பெரிய வெளிச்சம்.

03. இயேசுவை காட்டிக் கொடுத்த சீடன்.
i. பேதுரு
ii. யூதாஸ் காரியோத்.
iii. தோமா.
iv. யோவான்.

04. திபேரியா கடலில் மீன் பிடித்த சீடர்களில் உயிர்த்தெழுந்த இயேசுவை முதலில் இனம் கண்டு கொண்டவர்,
i. பேதுரு.
ii. அந்திரேயா.
iii. யாக்கோபு.
iv. யோவான்.

05. 1915 இல் முதலாம் உலக மகா யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமாதான இல்லம் என்ற அமைப்பை உருவாக்கியவர்,
i. அன்னை தெரேசா.
ii. இவ்ளின் கார்னி.
iii. டொனால்ட் கனகரத்தினம்.
iv. எல்னா எல்வின்

06. பார்த்தலேமுவை இயேசுவுக்கு அறிமுகம் செய்தவர்.
i. பேதுரு.
ii. யாக்கோபு
iii. பிலிப்பு.
iv. சோமா

07. இயேசுவை தனது வீட்டுக்கு வரும்படி பணிவோடு வேண்டிக்கொண்டவர்
i. யாயிர்
ii. லாசரு
iii. மத்தேயு
iv. மரியா

08. இயேசு சமூகத்தில் ஒதுக்கப்பட்டுள்ள என்னமோ ஒரு பெண்கள் மீது அக்கறை கொண்டிருந்தார் என்பதை விளக்கும் சம்பவம்.
i. சமாரிய பெண்ணோடு உறவாடியது
ii. நையீன் ஊர் விதைவையின் மகனை உயிர்ப்பித்தது
iii. லாசரை உயிரோடு எழுப்பியது
iv. கானானிய பெண்ணுக்கு உதவியது

09. இயேசுவை நீர் மெசியா வாழும் கடவுளின் மகன் என அறிக்கையிட்டவர்.
i. பேதுரு ii. யாக்கோபு iii. யோவான் iv. யூதா

10. தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் என அர்த்தபடுவது,
i. யாக்கோபின் வம்சம் ii. ஆபிரகாமின் வம்சம் iii. தாவீதின் வம்சம் iv. யாக்கோபின் வம்சம்

11. கிறிஸ்தவர்களாகிய நாம் வாழ்க்கையில் முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியது,
i. அவதானமாக இருக்க வேண்டும் ii. வெற்றியடைய வேண்டும்
iii. நண்பர்களுடன் கலந்துரையாட வேண்டும் iv. ஜெபிக்க வேண்டும்

12. இயேசு நாதர் சிறு பிராயத்தில் வளர்ந்தது,
i. கல்லேயாவில் ii. சமாரியாவில் iii. எருசலேமில் iv. நாசரேத்து பட்டணத்தில்

13. இறைவன் மனிதனை எவ்வளவு அன்பு கூர்ந்தார் என்றால் தன்னுடைய ..................... உலகிற்கு அனுப்பினார்.
i. விடுதலையான ii. ஒரே பேரான குமாரனை iii. மகனை iv. மீட்பாளனே

14. பாவம் செய்யாதே என இயேசு கூறியது,
i. மரியாளுக்கு ii. மார்த்தாளுக்கு iii. பாவியான பெண்ணுக்கு iv. விதவை

15. இஸ்ரேலுக்கு வாக்களிக்கப்பட்ட மீட்பை காண ஆசையாக இருந்தவர்
i. பேதுரு ii. யாக்கோபு iii. சிமியோன் iv. யூதா

16. கிறிஸ்தவ பிள்ளைகளாகிய உமக்கு எதிராக செயல்படுபவர்களுக்கு நீர் செய்ய வேண்டியது
i. பகைத்தல் ii. பலித்தல் iii. மன்னித்தல் iv. பாராட்டுதல்

17. குருணாகல் மறைமாவட்டத்தின் மூன்றாவது ஆயர் யார்?
i. அருட்தந்தை சோமசிரி குமாரதாச ii. அருட்தந்தை கனக ரத்தினம்
iii. அருட்தந்தை அன்று குமார் iv. மெர்சலின் ஜயக்கொடி

18. கிறிஸ்தவ பிள்ளைகளாகிய உமக்கு இந்நாள் வரை அனைத்து ஆசிர்வாதங்களும் கிடைத்தது
i. தகுதியினால் ii. இறைவன் மூலம் iii. எமது புத்தியால் iv. எமது பெற்றோரினால்.

19. தலைமைத்துவம் வகிப்பதற்கு தேவையான குணாதிசயம் ஆவது,
i. அர்ப்பணிப்போடு கூடிய அன்பு ii. பலியோடு கூடிய அன்பு
iii. ஆன்மிகத்தோடு கூடிய அன்பு iv. தாழ்மையோடு கூடிய அன்பு

20. உலகை புனிதப்படுத்தவும் செயலை செய்தோர்
i. இறைவன் ii. இயேசு iii. புனிதர் iv. தூய ஆவி

## பகுதி II

முதலாம் வினா கட்டாயமானதாகும். முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்க.

01. சுருக்கமான விடை எழுதுக.

1. கெனசரேத் ஏரி எப்பெயரால் அழைக்கப்படும்?
2. இளைப்படைப்பில் மேன்மையான படைப்பு யாது?
3. உமது திருச்சபைக்கு உம்மால் செய்யக்கூடிய நற்செயல்கள் இரண்டு தருக?
4. இயேசுவின் பணிக்கு முன்னோடியாக திகழ்ந்தவர் யார்?
5. மனிதனின் பாவம் காரணமாக அவனுக்கு கிடைத்த தண்டனைகள் இரண்டு தருக.
6. இறைவனின் படைப்பை பாதுகாக்க நீர் செய்யக்கூடியவை இரண்டு தருக
7. யூதர்களே யூதர்களால் புறம் தள்ளப்பட்ட மக்கள் கூட்டம் இரண்டு தருக.
8. கோலியாத்தை தோற்கடித்தது யார்?

02.
1. நல்லாயனாக அறிமுகப்படுத்தப்படுபவர் யார்?
2. நல்லாயன் செய்யும் காரியங்கள் மூன்று தருக?
3. இயேசுவை அறியாத மாணவர்கள் இயேசுவை அறிய நீர் செய்யக்கூடிய செயல்கள் மூன்று தருக.

03.
1. இஸ்ராயேல் மக்களை அடிமைத்தனத்தில் இருந்து மீட்க இறைவன் யாரை தேர்வு செய்தார்?
2. இஸ்ரயேல் மக்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்த பார்வோன் கையாண்ட வழிமுறைகள் மூன்று தருக.
3. துன்பத்திற்கு முகம் கொடுத்துள்ள உமது நண்பனுக்கு செய்யக்கூடிய உதவிகள் மூன்று தருக.

04.
1. இறை அழைப்பு என்றால் என்ன?
2. இறை பணிக்காக அழைப்பு பெற்ற ஒருவரிடம் இருக்க வேண்டிய பண்புகள் மூன்று தருக.
3. உமக்கு இறை அழைப்பு கிடைப்பின் நீர் எவ்வாறு செயற்படுவீர் என்பதற்கு மூன்று உதாரணம் தருக.

05.
1. அண்மை காலத்தில் மறை பரப்பு பணியில் ஈடுபட்ட இரண்டு பெண்களை குறிப்பிடுக.
2. மார்த்தால், மரியாள் ஆகிய இருவர் கதையில் மரியாளிடம் காணப்பட்ட பண்புகள் மூன்று தருக.
3. இறைவனை கிட்டி சேர்வதற்கு நீர் செய்யக்கூடியவை மூன்று தருக.

06.
1. மக்கள் என்னை யார் என சொல்கிறார்கள் என்று இயேசு கேட்ட கேள்விக்கு பேதுரு கூறிய பதில் என்ன?
2. இயேசுவுக்கும் பேதுருவுக்கும் இடையில் கலந்துரையாடல் நடைபெற்ற சந்தர்ப்பங்கள் மூன்று தருக.
3. வகுப்பு தலைவனான உமக்கு பேதுருவின் வாழ்வில் இருந்து பெறக்கூடிய முன்மாதிரிகள் மூன்று தருக.

07. பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக

1. திரு விவிலியம்
2. தூய ஆவியின் கனிகள்
3. நல்லாயன்
4. எரேமியா

(4) WWW.PastPapers.WiKi (3)
Download Term Test Papers, Short Notes From One Place!

PAST PAPERS WIKI
(4) WWW.PastPapers.WiKi (4)

Download Term Test Papers, Short Notes From One Place!

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் 08 - 2023 (2024)
Third Term Test - Grade 08 - 2023 (2024)

# கிறிஸ்தவம்

விடைகள்

## பகுதி I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 06. | 3 | 11. | 4 | 16. | 3 |
| 02. | 3 | 07. | 1 | 12. | 4 | 17. | 3 |
| 03. | 2 | 08. | 1 | 13. | 2 | 18. | 2 |
| 04. | 4 | 09. | 1 | 14. | 3 | 19. | 1 |
| 05. | 2 | 10. | 1 | 15. | 3 | 20. | 3 |

## பகுதி II

01. 1. திபெரியா கடல்
2. மனிதன்
3. பாடகர் குழுவில் இணைந்து பாடல், திருமறை படிப்பினைகளில் கலந்துகொள்ளல், ஆலய காரியங்களில் ஈடுபடல்
4. திருமுழுக்கு யோவான்
5. மரணம், இறை உறவில் இருந்து பிரிந்து செல்லல்
6. இயற்கை பாதுகாத்தல், உயிரினங்களை மதித்தல்
7. வரி தண்டுவோர், பாவிகள்
8. தாவீது

02. 1. இயேசு
2. அன்பு செய்தல், பாதுகாத்தல், உணவளித்தல்
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக

03. 1. மோசேயை
2. அதிக வேலை சுமை, குழந்தைகளை கொலை செய்தல், நையில் நதியில் வீசுதல்
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக

04. 1. இறைபணியில் விசேட பொறுப்பிற்காக இறைவன் தேர்வு செய்தல் இறை அழைப்பு எனப்படும்
2. மனம் வருந்துதல், கீழ்ப்படிவு, தாழ்மை, நம்பிக்கை, நேர்மை
3. பொருத்தமான விலைக்கு புள்ளி வழங்குக

05. 1. இவ்லின் கார்னி, ஜொய்ஸ் த சில்வா, எடா பர்னாந்து
2. இயேசுவின் காலடி அருளில் இருக்க விம்பினாள்.
இயேசு சொல்வதைக் கேட்டாள்
நல்ல பங்கை தேர்ந்தெடுத்துக் கொண்டாள்
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக

06. 1. நீர் மெசியா வாழும் கடவுளின் மகன்
2. மரிப்பதற்கு தயாராய் இருக்கிறேன் என கூறல்
அவரை தெரியாது எனக் கூறல்
நீ மனம் திரும்பி உன் சகோதரனை உறுதிப்படுத்து
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக

07. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக

PAST PAPERS WIKI
(1) www.PastPapers.WiKi (1)



Download Term Test Papers, Short Notes From One Place!


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න